பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

30 11 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. Ditwah புயலால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. உள்நாட்டுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்குவதை ஒட்டி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு இன்று அழைப்பு விடுத்துள்ளது.

4. தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் திரு. Sihasak Phuangketkeow நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக நேற்றிரவு புதுதில்லி வந்தடைந்தார்.

5. போபாலில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆர்யன் ஷா - அதர்வா ஷர்மா இணை பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

Ditwah புயல் தமிழகத்தின் வட கடலோர பகுதியை நோக்கி நகர்ந்து வருவதாகவும் புதுச்சேரிக்கு தென்கிழக்கே 160 கிலோ மீட்டர் தொலைவிலும்,

சென்னைக்கு தெற்கே 250 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே Ditwah புயலால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் நாகை மாவட்டத்தில் அவசர கால உதவிக்கு ஏதுவாக தேசிய பேரிடர் மீட்புக் குழு தயார் நிலையில் உள்ளதாக அதன் துணை கமாண்டர் திரு. சுதாகர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்நிலையில் ரயில் பயணிகளின் பாதுகாப்பு கருதி தெற்கு ரயில்வே விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து தெற்கு ரயில்வே அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், ரயில்கள் மாற்றுப் பாதையில்

இயக்கப்படுவது அல்லது ரத்து செய்யப்பட்டது குறித்த செய்திகளை பயணிகள் அறிந்துகொள்ள ஏதுவாக பிரத்யேக தொலைபேசி எண் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிலையில் அவசர கால கட்டுப்பாட்டு அறை இன்று முதல் செயல்பாட்டுக்கு வரும் என்று ரயில்வே தெரிவித்துள்ளது.

இந்தப் புயலால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அதிகாரிகள் மற்றும் கடலோர காவல் படையைச் சேர்ந்த அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வருவதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, தெலங்கானா, ஆந்திரப்பிரதேச மாநிலங்களைச் சேர்ந்த தலைமைச் செயலாளர்களுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து உள்துறை செயலாளர் ஆய்வு மேற்கொண்டார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக கடலோரப் பகுதியில் கடலோர காவல் படையைச் சேர்ந்த 3 கப்பல்களும், ஒரு விமானமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே Ditwah புயல் மற்றும் கனமழை காரணமாக சென்னை விமான நிலையத்தில் இரண்டாவது நாளாக இன்றும் 47 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உள்நாட்டுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், உள்நாட்டுப் பாதுகாப்பில் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது குறித்தும், புதிய கண்டுபிடிப்புகளை பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் காவல்துறை உயர் அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் நவராய்பூரில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் காவல்துறை தலைமை இயக்குநர்கள் மற்றும் தலைமை ஆய்வாளர்களின் மூன்று நாள் மாநாடு இன்று நிறைவடைகிறது.

இந்த மாநாட்டில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், உள்துறை இணையமைச்சர், பல்வேறு மாநிலங்கள்

மற்றும் யூனியன்பிரதேசங்களை சேர்ந்த காவல்துறை தலைமை இயக்குநர்கள் மற்றும் உயரதிகாரிகள் பலர் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

இடதுசாரி தீவிரவாதம், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள், பேரிடர் மேலாண்மை, பெண்கள் பாதுகாப்பு உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும், தடய அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்தும் இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த மாநாட்டில் சிறப்பாக பணியாற்றிய காவல்துறையினருக்கு குடியரசுத்தலைவரின் காவலர் பதக்கங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி வழங்குகிறார்.

<<<<>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்குவதை ஒட்டி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு இன்று அழைப்பு விடுத்துள்ளது.

புதுதில்லியில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் மக்களவை மற்றும் மாநிலங்களவை சுமுகமாக செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து

அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக நடைபெறும் வகையில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தொடரின்போது பல்வேறு முக்கிய மசோதாக்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தொடர் நாளை தொடங்கி டிசம்பர் 19ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

**<<<<>>>>**

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது. இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக ஹரியானா மாநிலம் குருஷேத்ராவிற்கு இன்று செல்கிறார்.

குருஷேத்ராவில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக அவர் பங்கேற்கிறார்.

பின்னர் சர்வதேச கீதா மஹோத்சவத்தின் ஒருபகுதியாக நடைபெறும் அகில பாரதிய தேவஸ்தான சம்மேளன நிகழ்ச்சியிலும் திரு. ராதாகிருஷ்ணன் கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

சர்தார் வல்லபாய் பட்டேலின் கனவுகளை நனவாக்கும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் வதோதராவில் வல்லபாய் பட்டேலின் 150வது பிறந்த தினத்தின் ஒருபகுதியாக நடைபெற்ற ஒற்றுமை யாத்திரையில் கலந்துகொண்டு பேசிய அவர், அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 370 நீக்கப்பட்டது, நாட்டின் உண்மையான ஒற்றுமை உணர்வை பிரதிபலிக்கும் வகையில் உள்ளது என்று கூறினார்.

இரண்டே ஆண்டுகளில் 562 சமஸ்தானங்களை ஒன்றிணைத்து ஒரே இந்தியாவாக உருவாக்கி சர்தார் பட்டேல் சாதனை படைத்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டுப் பற்று மற்றும் வாய்மைக்காக சர்தார் பட்டேல் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளதை அப்போது அவர் நினைவுகூர்ந்தார்.

இதனிடையே இந்த பாத யாத்திரை நாட்டின் ஒற்றுமை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணியாக உள்ளது என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட ஒருநாள் பாத யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும், இதில் விளையாட்டு வீரர்கள் கௌரவிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

யுனெஸ்கோ அமைப்பின் செயல்பாட்டு வாரிய உறுப்பினராக இந்தியா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு முதல் 2029ஆம் ஆண்டு வரை இந்தியா இந்தப் பொறுப்பில் இருக்கும் என்று யுனெஸ்கோவிற்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கல்வி, கலாச்சாரம், அறிவியல், தகவல் தொடர்பு ஆகிய துறைகளில் இந்தியாவின் செயல்பாடுகள் மற்றும் அதன் உறுதியான பன்முகத்தன்மை மீதான நம்பிக்கை காரணமாக சர்வதேச நாடுகள் இந்தியாவை மீண்டும் தேர்வு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் மனித குலத்தை மையமாகக் கொண்ட வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது போன்ற அம்சங்களைக் கருத்தில் கொண்டு இந்தியா செயல்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா மீது நம்பிக்கை வைத்து மீண்டும் தேர்ந்தெடுப்பதற்காக அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக யுனெஸ்கோவிற்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் திரு. Sihasak Phuangketkeow நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக நேற்றிரவு புதுதில்லி வந்தடைந்தார்.

அவரது இந்தப் பயணத்தின்போது வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இதன்மூலம் இருநாடுகளுக்கும் இடையேயான நல்லுறவு மேலும் வலுவடையும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தில்லியில் சங்கம் விஹார் பகுதியில் உள்ள அடுக்குமாடிக்கு குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர்.

இந்த தீ விபத்து காரணமாக அப்பகுதிகளில் கடும் புகைமூட்டம் நிலவுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்து குறித்து காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

<<<<>>>>

போபாலில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆர்யன் ஷா - அதர்வா ஷர்மா இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 1-6, 6-4, 10-6 என்ற செட் கணக்கில் பிரஜ்வல் தேவ் - நிதின்குமார் சின்ஹா இணையை வென்றது.

------------

இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ராஞ்சியில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

----------------

சையத் முஷ்டாக் அலி கோப்பைக்கான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி இன்று உத்தராகண்ட் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இப்போட்டி பிற்பகல் 1.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>